**செய்திவெளியீடு எண்.49/2017** **நாள்: 08.08.2017**

சென்னைக் குடிநீர் வாரியத்தின், மீஞ்சூரில் அமைந்துள்ள கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் 1000 மி.மீ. விட்டமுடைய குழாயில் அவசர கால பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், 10.08.2017 அன்று காலை 10:00 மணி முதல் மறுநாள் 11.08.2017 காலை 11:00 மணி வரை : இந்நிலையத்தின் கடல்நீர் சுத்திகரிப்பு பணிகள் நிறுத்தி வைக்கப்பட உள்ளன.

இதனால் மாதவரம், மணலி, படேல்நகர், திருவொற்றியூர், எர்ணாவூர், கத்திவாக்கம், வியாசர்பாடி, கொடுங்கையூர், கண்ணதாசன் நகர், இராதாகிருட்டிணன் நகர் ஆகிய பகுதிகளுக்கு 10.08.2017 அன்று காலை 10:00 மணி முதல் மறுநாள் 11.08.2017 காலை 11:00 மணி வரை குடிநீர் குழாய் மூலம் வழங்க இயலாது.

எனவே, பொதுமக்கள் தங்களுக்கு தேவையான குடிநீரை முன்கூட்டியே சேகரித்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. மேலும் அவசர தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்க்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| துணைப் பகுதிப் பொறியாளர் – பகுதி 1 | : | 81449 30202 |
| துணைப் பகுதிப் பொறியாளர் – பகுதி 2 | : | 81449 30615 |
| துணைப் பகுதிப் பொறியாளர் – பகுதி 3 | : | 81449 30206 |
| துணைப் பகுதிப் பொறியாளர் – பகுதி 4 | : | 81449 30254 |
| தலைமை அலுவலகம் (புகார் பிரிவு) | : | 044–45674567 மற்றும்<br>044–28454040<br>044–28451318 |

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்